# நீர்வள ஆதாரத்துறை
# பொதுப்பணித்துறை

# திட்டச் சாதனை
# 2010–2011

©
தமிழ்நாடு அரசு
2011

# திட்டச் சாதனை 2010–2011

## நீர்வள ஆதாரத் துறை

### 1. 2010–11 இல் முடிக்கப்பட்ட திட்டங்கள்

2010–11 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 1.1. மாநில நிதிப் பணிகள்

#### 1.1.1. நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

கடலூர் மாவட்டம், வெலிங்டன் நீர்த்தேக்கத்தை புனரமைத்து பலப்படுத்தும் பணிக்கு ரூ.29.71 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 9732 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடைகிறது.

#### 1.1.2. சிறு பாசனத் திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டம், மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க ரூ. 20.97 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 339 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடைகிறது.

திண்டுக்கல் மாவட்டம், அஞ்சுக்குழிப்பட்டி கிராமத்தில் சங்கிலியான் கோயில் ஓடை– சின்னாத்து ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்க ரூ.4.2 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 140 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடைகிறது.

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், அஹ்ரகார பூலாவாரி கிராமத்தில், திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள பூலாவாரி அணைக்கட்டிலிருந்து சித்தநேரி வரையிலான பாசனக் கால்வாய்களை நவீனப்படுத்துவதற்கு ரூ.0.78 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டன.

## 1.2. நபார்டு கடன் உதவித் திட்டங்கள்

### 1.2.1. நடுத்தர பாசனத்திட்டங்கள்

- ஈரோடு மாவட்டம், காளிங்கராயன் வாய்க்கால் மைல் 0/0 முதல் 56/5.5 வரை புனரமைக்க ரூ.13.04 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 6371 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடைகிறது.
- திருச்சி மாவட்டத்தில், காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேலணையில் பழுதடைந்துள்ள மதகுகளை புனரமைக்க ரூ.2 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரப்பள்ளி கிராமத்தில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் அமைத்து செருமாக்கநல்லூர் மற்றும் சக்கரப்பள்ளி கால்வாய்களுக்கு நீர் வழங்க, ரூ.4.02 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 1.2.2. சிறு பாசனத்திட்டங்கள்

சிவகங்கை மாவட்டத்தில் 27 முறைசார ஏரிகளை சீரமைக்க ரூ.5.63 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 1.2.3. வெள்ளத் தணிப்புப் பணிகள்

மதுரை மாநகரில் சாத்தையார் ஓடையில் வெள்ளத் தடுப்புப் பணிக்காக ரூ.5.81 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 2. 2010–2011 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் திட்டங்கள்

### 2.1. மாநில நிதித் திட்டங்கள்

#### 2.1.1. பெரும் பாசனத் திட்டங்கள்

**பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டப்பகுதியில் எல்.எஸ்.0 கி.மீ முதல் 49.30 கி.மீ. வரை சமமட்ட கோட்டுக் கால்வாயை புனரமைத்தல்.**

பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டப்பகுதியில் சமமட்ட கோட்டுக் கால்வாயை எல்.எஸ். 0 கி.மீ. முதல் 49.30 கி.மீ. வரை புனரமைக்க ரூ.184.5 கோடி மதிப்பீட்டில் 3/2011 இல் பணிகள் துவங்கப்பட்டன. இப்பணிகள் 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டத்தில் ஏற்கனவே உள்ள 1.72 எக்டேர் இலட்சம் ஆயக்கட்டு நிலங்கள் பயனடைகிறது.

#### 2.1.2. நடுத்தர பாசனத் திட்டங்கள்

**காவிரி டெல்டா மாவட்டங்களில் பழுதடைந்த கட்டுமானங்களை புனரமைக்கும் பணி (2009–2010)**

காவிரி டெல்டா மாவட்டங்களில் பழுதடைந்த கட்டுமானங்களை புனரமைக்கும் பணிக்காக சென்னை மண்டலத்திற்கு 46 பணிகளை மேற்கொள்ள ரூ.4 கோடி மற்றும் திருச்சி மண்டலத்திற்கு 397 பணிகளை மேற்கொள்ள ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை மண்டலத்தில் 46 பணிகளில், 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பாசனக் காலத்திற்குப் பின் துவக்கப்படும். திருச்சி மண்டலத்தில் 397 பணிகளில் 300 பணிகள் முடிவுற்றும் 87 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. மீதமுள்ள 10 பணிகள் துவங்கப்படவுள்ளன.

**கடலூர் மாவட்டத்தில் புதிய வீராணத்தை மேம்படுத்தி குடிநீர் வழங்குதல்**

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் கடலூர் மாவட்ட புதிய வீராணத்தை மேம்படுத்த ரூ.60 கோடிக்கு 1993இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் 7/1997இல் துவங்கப்பட்டன. இத்திட்டத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ.106.35 கோடிக்கு 2009இல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் 27 பணிகளில் 2 பணிகள் முடிவுற்றும் 21 பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய 4 பணிகள் துவங்கப்பட உள்ளன.

**தஞ்சாவூர் மாவட்டம், கீழ் அணைக்கட்டில் உள்ள தெற்கு மற்றும் வடக்கு கிளைநீர் போக்கியை புனரமைத்தல் மற்றும் கனிட்டிங் (Gunitting) செய்தல்**

தஞ்சாவூர் மாவட்டம், கீழ் அணைக்கட்டில் உள்ள தெற்கு மற்றும் வடக்கு கிளைநீர் போக்கியை புனரமைத்தல் மற்றும் கனிட்டிங் (Gunnitting) செய்வதற்கு ரூ.6.21 கோடிக்கு 2010 இல் ஒப்புதல் வழங்கப்பட்டு 11/2010 இல் பணிகள் துவங்கப்பட்டு 50% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.2. சிறுபாசனத் திட்டங்கள்

**மதுரை மாவட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல்**

மதுரை மாவட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்கு ரூ.33.81 கோடிக்கு 1996 –இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு 7/1999–இல் பணிகள் துவங்கப்பட்டன. இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ.74.60 கோடிக்கு 2006–இல் வழங்கப்பட்டன. ரூ. 82.67 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவரை 96% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு தொட்டிபாலங்கள் கட்டும் பணி நடைப்பெற்று வருகிறது. இதன்மூலம் 925 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.

**தருமபுரி மாவட்டம், மத்தலப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல்**

தருமபுரி மாவட்டம், மத்தலப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைக்கும் பணிக்காக 2001–இல் ரூ.14.15 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் 03/2005–இல் துவங்கப்பட்டன. 93% பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 3/2012ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 445 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.

**வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைத்தல்**

வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைக்க ரூ.29.55 கோடிக்கு 1997–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு 12/2007–ல் பணிகள் துவங்கப்பட்டன. தற்போது 40% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 1125 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயன்பெறும்.

**வேலூர் மாவட்டம் கோயில்மலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்.**

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், மேலரசம்பட்டு கிராமத்தில் கோயில்மலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணிக்கு ரூ.12.98 கோடிக்கு 2005–இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**2.2. நபார்டு திட்டங்கள்**

**2.2.1. பெரும் பாசனத் திட்டங்கள்**

**0.75 கி.மீ. முதல் 58.67 கி.மீ. வரையிலான கல்லணைக் கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்கள் மற்றும் கள்ளப்பெரம்பூர் ஏரியை நவீனப்படுத்துதல்**

0.75 கி.மீ. முதல் 58.67 கி.மீ. வரையிலான கல்லணைக் கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்கள் மற்றும் கள்ளப்பெரம்பூர் ஏரியை

நவீனமாக்கும் பணிக்கு ரூ. 130.34 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் 2009–இல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 95% பணிகள் முடிவடைந்துள்ளன. இதன்மூலம் 21348 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.

**மதுரை மாவட்டம் வைகை ஆற்றின் விரகனூர் மதகின் இடிந்த நிலையில் உள்ள தடுப்பு தரை தளத்தை (talus apron) மறு சீரமைத்தல் சேதமடைந்த இரும்பு மதகுகளை புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல்**

மதுரை மாவட்டம் வைகை ஆற்றின் விரகனூர் மதகின் இடிந்த நிலையில் உள்ள தடுப்பு தரை தளத்தை (Talus apron) மறு சீரமைத்தல், சேதமடைந்த இரும்பு மதகுகளை புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தலுக்கு ரூ. 5 கோடிக்கு 2010–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு 2/2011 –இல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 10% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 16766 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.

### 2.2.2. நடுத்தர பாசனத்திட்டங்கள்

**தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாடு பகுதியில் 58.67 கி.மீ. முதல் 92.20 கி.மீ. வரையிலான கல்லணைக் கால்வாயை புனரமைப்பு செய்தல்**

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாடு பகுதியில் 58.67 கி.மீ. முதல் 92.20 கி.மீ. வரையிலான கல்லணைக் கால்வாயை புனரமைப்பு செய்வதற்கு ரூ.28.58 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் 2010–ல் வழங்கப்பட்டு இதுவரை 91% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 2700 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயன்பெறும்.

**தர்மபுரி மாவட்டம், ஜெர்தலாவ் வாய்க்காலுக்கு வரத்து வாய்க்கால் அமைத்தல்**

தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஜெர்தலால் வாய்க்காலின் தொட்லாம்பட்டி ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி மற்றும் 15 இதர ஏரிகள் பயன்பெறும்

வகையில் ஜொ்தலாவ் வாய்க்காலுக்கு வரத்து கால்வாய் அமைக்க ரூ.6.29 கோடிக்கு 2006–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு 11/2008–ல் பணிகள் துவங்கப்பட்டன. இதுவரை 57% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**ஈரோடு மாவட்டத்தில் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களை புனரமைத்தல்**

ஈரோடு மாவட்டத்தில் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களில் பழுதடைந்த மதகுகள், திருகு மரை கதவுகள் (Screw Gearing Shutters), குறுக்கு வடிகால்கள் ஆகியவற்றை புனரமைக்க ரூ. 17.45 கோடிக்கு 2010–ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு 2/2011–ல் பணிகள் துவங்கப்பட்டன. இதுவரை 22% பணிகள் முடிக்கப்பட்டன. இத்திட்டம் மூலம் 9917 எக்டோ் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் தோவாளை மற்றும் இராதாபுரம் கால்வாக்களை புனரமைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் தோவாளை மற்றும் இராதாபுரம் கால்வாய்களைை புனரமைக்க ரூ.22.5 கோடி மதிப்பீட்டில், 9 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 2/2011ல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 7% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 5207.60 எக்டோ் ஆயக்கட்டும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 6879.80 எக்டோ் ஆயக்கட்டும் நிலங்கள் பயன்பெறும்.

**தேனி மாவட்டத்தில் பாளையம்பரவு மற்றும் பி.டி.ராஜன் வாய்க்கால்களை புனரமைத்தல்**

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் பெரியார் வைகை வடிநிலத்தில் பாளையம்பரவு மற்றும் பி.டி.ராஜன் வாய்க்கால்களை புனரமைக்க ரூ.10.08 கோடி மதிப்பீட்டில் 10/2010–ல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் மூலம் இவ்விரண்டு கால்வாய்களுக்கும் நீர் கொண்டு செல்லும் திறம் அதிகரிக்கப்படும். இதுவரை 26% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 3070 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயன்பெறும்.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் மந்திவலசை அருகே வைகையாற்றின் குறுக்கே படுகை அணை அமைத்து களறி வாய்க்காலுக்கு நீர் வழங்குதல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் மந்திவலசை அருகே வைகையாற்றின் குறுக்கே படுகை அணை அமைத்து களறி வாய்க்காலுக்கு நீர் வழங்க ரூ.14.2 கோடி மதிப்பீட்டில் 10/2010 ல் பணிகள் துவங்கப்பட்டன. இதுவரை 21% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மதுரை மாவட்டம் நிலையூர் கால்வாயினை புனரமைத்தல்**

மதுரை மாவட்டம் நிலையூர் கால்வாயினை புனரமைத்து அதன் நீர் கடத்தும் திறனை அதிகரித்து நிலையூர் விரிவுபடுத்தப்பட்ட கால்வாய்க்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூ.23.5 கோடி மதிப்பீட்டில், 2/2011ல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் வைகையாற்றின் வெள்ளநீர் நிலையூர் கால்வாய் வழியாக திருப்பிவிடப்பட்டு அதன் மூலம் நிலையூர் விரிவுபடுத்தப்பட்ட கால்வாயின் துவக்கப்பகுதியில் தேவைப்படும் 654 கன அடியை பூர்த்தி செய்து மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 94 வறண்ட கண்மாய்களுக்கு நீர் வழங்கப்படும். 94 காண்மாய்களை (மதுரை மாவட்டத்தில் 50 கண்மாய்கள், விருதுநகர் மாவட்டத்தில் 21 கண்மாய்கள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 23 கண்மாய்கள்) உள்ளடக்கிய இவ்விரிவுபடுத்தப்பட்ட கால்வாயின் பாசனப் பரப்பு 4027 எக்டேர் ஆகும்.

### 2.2.3. சிறு பாசனத் திட்டங்கள்

**கிருஷ்ணகிரி மாவட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணாம் பள்ளி கண்மாய் வரை புதிய வரத்துக் கால்வாய் அமைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், படதலேவ் கண்மாயிலிருந்து வெண்ணாம் பள்ளி மற்றும் காசிம்கான் கண்மாய் வரை உள்ள இதர கீழ் கண்மாய்களுக்கு புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிக்கு ரூ.13.5 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. கால்வாய் அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. குறும்பாலம் அமைக்கும் பணி தே.நெ 219ல் நெடுஞ்சாலைத்துறையால் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. இதன் மூலம் 1149 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயன்பெறும்.

**சேலம் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள நெய்க்காரப்பட்டி கண்மாயை புனரமைத்து மேம்படுத்துதல்**

சேலம் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள நெய்க்காரப்பட்டி கண்மாயைப் புனரமைத்து மேம்படுத்த ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டன. இதுவரை 52% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் பெரிய ஏரியை நவீனப்படுத்துதல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் பெரிய ஏரியை நவீனப்படுத்த ரூ. 9.73 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு 41 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**திருநெல்வேலி மாவட்டம் நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைத்தல்**

நம்பியாற்றின் குறுக்கே உள்ள மைலாப்புதூர் அணைக்கட்டை மறுசீரமைப்பதற்காக ரூ.8.00 கோடி பணிகள் துவங்கப்பட்டு 7% பணிகள் முடிவடைந்துள்ளன. இதன்மூலம் 251.64 எக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

**திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் அணைக்கட்ட கால்வாயை புனரமைத்தல்**

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டம், ஆத்தூர் அணைக்கட்டு கால்வாயை புனரமைக்கும் பணிக்காக ரூ.8.5 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு 15% பணிகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் 423.83 எக்டேர் (ஒரு போக பாசனம், 467.04 எக்டேர் இருபோகம் பாசனம், பயன்பெறும் மற்றும் 306.55 எக்டேர் பாசன பசதிகளையும் ஈடுசெய்யப்படும்.

**புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் முடியனாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் முடியனாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணிக்காக ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்களை மேம்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்களை மேம்படுத்துவதற்கு ரூ. 3 கோடி மதிப்பீட்டில் 2/2011–இல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 65% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**காஞ்சிபுரம் மாவட்டம், நீஞ்சல்மடுவு அணைக்கட்டை மீண்டும் கட்டுதல் மற்றும் பொன்விளைந்தகளத்தூர் கால்வாயினை சீரமைத்தல்**

காஞ்சிபுரம் மாவட்டம், நீஞ்சல்மடுவு அணைக்கட்டை மீண்டும் கட்டுதல் மற்றும் பொன்விளைந்தகளத்தூர் கால்வாயினை சீரமைப்பதற்கு ரூ. 9 கோடி மதிப்பீட்டில் 3/2011–இல் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்தில், கொத்தையம் கிராமத்தில் உள்ள நல்லத்தங்காள் ஒடையின் குறுக்கே ஏரி அமைத்தல்**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்தில், கொத்தையம் கிராமத்தில் நல்லத்தங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைப்பதற்கு ரூ.6.97 கோடி மதிப்பீட்டில் 2/2011–இல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 23ரூ பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**புதுக்கோட்டை மாவட்டம், தண்டலை கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே பாசன வசதி பெறும் வகையில் மும்பாளை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக புதிய அணை கட்டு அமைத்தல்**

புதுக்கோட்டை மாவட்டம், தண்டலை கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே பாசன வசதி பெறும் வகையில் மும்பாளை மற்றும் வடக்கு மனமேல்குடி ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக புதிய அணை கட்டு அமைப்பதற்கு ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் 2/2011–இல் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 10% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**3. வெள்ளத் தடுப்புத் திட்டங்கள்**

**திருச்சி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் – (23 பணிகள்)**

திருச்சி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில், காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளை நிரந்தரமாகத் தடுப்பதற்கான 23 பணிகள் ரூ.207.5449 கோடி

மதிப்பீட்டில் 1/2009–இல் துவங்கப்பட்டுள்ளன. 23 பணிகளில் 16 பணிகள் முடிவுற்றும் எஞ்சிய 7 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

**திருச்சி மாவட்டத்தில் குடமுருட்டி ஆற்றில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்**

திருச்சி மாவட்டத்தில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூ.45.60 கோடி மதிப்பீடில் 02/2009 –இல் துவங்கப்பட்டன. நபார்டு வங்கி 6 பணிகளாக செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. 3 பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, 2 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 1 பணி நெடுஞ்சாலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

## 4. நீர்வள நிலவளத் திட்டம்

i. நீர்வள நிலவளத் திட்டத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.2,547 கோடி மதிப்பீட்டில் 2007ஆம் ஆண்டு முதல், ஆறு ஆண்டு காலத்தில் 6.16 லட்சம் எக்டேர் பாசன பரப்பு பயனடையவும் மற்றும் 6 இதர துறைச் சார்ந்த பணிகளுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ii. தமிழகத்தில் உபவடிநில கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

iii. 6.16 லட்சம் எக்டேர் பாசனப் பரப்பு அடங்கிய 60 தெரிவு செய்யப்பட்ட உபவடிநிலங்களின் பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன் மூலம், பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், நீர் ஆதாரங்களைப் புனரமைத்து சீர்படுத்துதல் மூலம் ஏரிப்பாசன

முறையை நவீனமாக்குதல் மற்றும் கால்வாய்ப்பாசன அமைப்பை சீர்செய்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் அடங்கும்.

**vi.** மேம்படுத்தப்பட்ட வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப்பயிர் செய்தல், நுண்பாசனம், கால்நடைவளர்ப்பு, மீன்வளம் போன்ற பணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பெருமளவு நீர்ப் பகிர்ந்தளிப்பு முறையினை மேம்படுத்துதல் மூலம் செயல்படுத்தப்படும்.

**4.1. திட்டச் செயலாக்கம்: (2007–2013)**

| கட்டம் | செயலாக்க ஆண்டு | உபவடிநிலங்கள் | பாசன நிலப்பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|
| I | 2007–08 | 9 | 289498.50 |
| II | 2008–09 | 16 | 67206.21 |
| III | 2009–10 | 30 | 182119.18 |
| IV | 2011–2012 | 5 | 76996.34 |
| **மொத்தம்** | | **60** | **615820.23** |

| வ.எண் | கட்டம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | I | 76 | 45124.87 |
| 2 | II | 43 | 18785.87 |
| 3 | III | 136 | 42660.10 |
| 4 | IV | 47 | 17261.64 |
| **மொத்தம்** | | **302** | **123832.48** |

## 4.2. முதல் கட்டம் – 9 உபவடிநிலங்கள்

| வ. எண் | உபவடிநிலம் | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட குளங்கள் | | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட அணைக்கட்டுகள் | | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வரத்துக் கால்வாய் (கி.மீ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | முடிக்கப் பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை |
| 1 | வராக நதி | 236 | 215 | 37 | 24 | 391.90 | 348.47 |
| 2 | கோட்டக் கரையாறு | 310 | 302 | 7 | 7 | 199.54 | 182.66 |
| 3 | மணிமுத்தாறு | 378 | 376 | 31 | 30 | 49.86 | 49.86 |
| 4 | பாம்பாறு | 292 | 289 | 20 | 20 | 220.65 | 220.65 |
| 5 | அர்ஜுனா நதி | 77 | 77 | 30 | 30 | 127.18 | 127.18 |
| 6 | தெற்கு வெள்ளாறு | 292 | 292 | 29 | 29 | 297.35 | 297.35 |
| 7 | மேல் வெள்ளாறு | 49 | 49 | 79 | 79 | 260.54 | 245.00 |
| 8 | ஆழியாறு | 0 | 0 | 0 | 0 | 189.10 | 187.60 |
| 9 | பாலாறு | 0 | 0 | 0 | 0 | 1331.55 | 1313.86 |
| **மொத்தம்** | | **1634** | **1600** | **233** | **219** | **3067.67** | **2972.63** |

## 4.3. இரண்டாம் கட்டம் –16 உப வடிநிலங்கள்

| வ. எண் | உபவடிநிலம் | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட குளங்கள் | | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட அணைக்கட்டுகள் | | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வரத்துக் கால்வாய் (கி.மீ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | முடிக்கப் பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை |
| 1 | பெண்ணையாறு முதல் கிருஷ்ணகிரி வரை | 6 | 3 | 11 | 2 | 108.22 | 56.33 |
| 2 | பொய்னி | 142 | 120 | 1 | 1 | 282.49 | 262.49 |
| 3 | கவுண்டயன் நதி | 33 | 33 | 0 | 0 | 111.45 | 111.45 |
| 4 | கலிங்கலாறு | 11 | 11 | 7 | 7 | 10.61 | 8.35 |
| 5 | நிசபநதி | 40 | 40 | 17 | 16 | 8.65 | 8.65 |
| 6 | சிந்தபள்ளி உப்போடை | 6 | 6 | 1 | 1 | 0.80 | 0.80 |
| 7 | செங்கோட்டை யாறு | 24 | 21 | 2 | 2 | 5.20 | 5.20 |
| 8 | தெற்காறு | 103 | 103 | 11 | 11 | 21.96 | 21.96 |
| 9 | மேல் குண்டாறு | 22 | 22 | 22 | 22 | 37.09 | 30.85 |
| 10 | மேல் வைகை | 9 | 9 | 4 | 4 | 2.05 | 2.05 |
| 11 | வரட்டாறு நாகலாறு | 7 | 7 | 9 | 9 | 0.83 | 0.83 |
| 12 | ஆனைவாரி ஓடை | 16 | 16 | 5 | 5 | 17.28 | 17.28 |
| 13 | சின்னாறு | 33 | 33 | 9 | 9 | 44.54 | 44.54 |
| 14 | அக்னியாறு | 183 | 141 | 16 | 15 | 285.80 | 188.20 |
| 15 | அம்புளியாறு | 104 | 104 | 17 | 17 | 80.85 | 80.85 |
| 16 | சுவேதா நதி | 18 | 16 | 33 | 29 | 73.80 | 73.80 |
| | **மொத்தம்** | **757** | **685** | **165** | **150** | **1091.62** | **913.63** |

## 4.4. மூன்றாம் கட்டம் – 30 உப வடிநிலங்கள்

| வ. எண் | உபவடிநிலம் | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட குளங்கள் | | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட அணைக்கட்டுகள் | | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வரத்துக் கால்வாய் (கி.மீ) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | முடிக்கப் பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை | மொத்தம் | முடிக்கப் பட்டவை |
| 1 | கோவிலாறு | 0 | 0 | 2 | 0 | 7.78 | 0 |
| 2 | மார்கண்டைய நதி | 3 | 2 | 9 | 1 | 20.00 | 1.50 |
| 3 | பாம்பனாறு வரட்டாறு | 3 | 0 | 20 | 0 | 45.29 | 0 |
| 4 | துறிஞ்சலாறு | 70 | 0 | 26 | 0 | 145.76 | 0 |
| 5 | பாம்பாறு முதல் திருக்கோவிலூர் | 54 | 0 | 0 | 0 | 89.29 | 29.10 |
| 6 | ஓங்கூர் | 165 | 0 | 10 | 0 | 349.82 | 0 |
| 7 | ஆரணியாறு | 164 | 0 | 1 | 0 | 214.45 | 11.45 |
| 8 | கம்பைநல்லூர் | 21 | 0 | 61 | 0 | 106.005 | 1.70 |
| 9 | நல்லாவூர் | 75 | 0 | 2 | 0 | 109.18 | 0 |
| 10 | கடிலம் | 86 | 0 | 13 | 0 | 262.65 | 0 |
| 11 | கோமுகி நதி | 68 | 0 | 43 | 0 | 189.98 | 0 |
| 12 | கொசஸ்தலையாறு | 262 | 0 | 0 | 0 | 448.582 | 0 |
| 13 | தேனியாறு | 30 | 0 | 11 | 0 | 48.58 | 0 |
| 14 | கீழ் குண்டாறு | 62 | 2 | 3 | 0 | 18.30 | 13.07 |
| 15 | தேவியாறு | 50 | 0 | 6 | 0 | 83.55 | 16.50 |
| 16 | வைப்பாறு | 22 | 0 | 2 | 0 | 0.50 | 0 |
| 17 | வேம்பாறு | 18 | 1 | 0 | 0 | 14.10 | 0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | நகரியாறு | 11 | 0 | 6 | 0 | 9.80 | 0 |
| 19 | சீவலப்பெரியாறு | 17 | 0 | 3 | 0 | 4.24 | 0 |
| 20 | காணல் ஓடை | 44 | 3 | 0 | 0 | 8.60 | 0 |
| 21 | வள்ளம்பட்டி ஓடை | 5 | 0 | 1 | 0 | 1.10 | 0 |
| 22 | பாலாறு | 34 | 0 | 0 | 0 | 6.56 | 0 |
| 23 | உப்பத்தூறாறு | 5 | 0 | 2 | 0 | 5.50 | 0 |
| 24 | கிருதுமால் | 113 | 0 | 7 | 0 | 152.28 | 31.07 |
| 25 | உப்போடை | 26 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 26 | காலைக்குளமாறு | 5 | 0 | 1 | 0 | 7 | 0 |
| 27 | கோரம்பள்ளமாறு | 4 | 0 | 1 | 0 | 7 | 0 |
| 28 | கருமேனியாறு | 87 | 0 | 15 | 0 | 74.87 | 0 |
| 29 | ஹனுமாநதி | 84 | 0 | 8 | 0 | 85.04 | 2.15 |
| 30 | உத்திரகோச மங்கையார் | 110 | 4 | 0 | 0 | 104.45 | 0 |
| **மொத்தம்** | | **1698** | **12** | **254** | **9** | **2620.24** | **106.54** |

### 4.5. நான்காம் கட்டம் – 5 உப வடிநிலங்கள்

| வ. எண் | உபவடிநிலம் | ஆயக்கட்டு எக்டேர் | புனரமைக் கப்பட எடுத்துக் கொள்ளப் பட்ட குளங்கள் | புனரமைக்கப்ப ட எடுத்துக் கொள்ளப்பட்ட அணைக்கட் டுகள் | புனரமைக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வரத்துக் கால்வாய் (கி.மீ) |
|---|---|---|---|---|---|
| 1 | கூவம் | 13475.23 | 60 | --- | 49.75 |
| 2 | அடையாறு | 18452.89 | 146 | --- | 177.72 |
| 3 | செய்யாறு – கிள்ளியாறு | 36860.08 | 453 | 2 | 688.11 |
| 4 | பரலையாறு | 10884.14 | 89 | 1 | 121.72 |
| 5 | காயல்குடியாறு | 861.68 | 13 | 2 | 18.40 |
| | **மொத்தம்** | **76996.34** | **761** | **5** | **1055.70** |

### 4.6. தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் மேலாண்மை

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத்துறையின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் மேலாண்மை அமைப்பு மூலம் நவீனப்படுத்துதல். இதன்மூலம் குறித்த நேரத்தில் கிடைக்கும் தகவல்கள் மூலம் நீரிவள ஆதாரத்துறையின் செயல்பாடுகளை திறம்பட மேம்படுத்தவும், சிறப்பாக திட்டமிடவும் மற்றும் கண்கானிக்கவும் இயலும். இப்பணிகளை செயல்படுத்திட 42.4371 கோடி மதிப்பீட்டிற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் அனைத்தும் எல்காட் (ELCOT) மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இதற்காக ரூ.13.79 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்துறையில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளை மேம்படுத்த 1565 கணினிகளும், 335 மடிக்கணினிகளும், கணிப்பொறி சார்ந்த

உபகரணங்களும் மற்றும் குறும்பரப்பு வலையமைப்புகள் (LAN) அமைக்கவும் ரூ.13.79 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- துணிவாண்மை தகவல் மேலாண்மை அமைப்பை (Enterprise Information Management System) வடிவமைத்து செயல்படுத்த ஆலோசனை அமைப்பிற்கு ரூ.8.33 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- நீர்வள ஆதாரத் துறையின் 55 அலுவலகங்களை இணைக்கும் பெரும் வலை பரப்பை (WAN) மாநில நிதியில், தமிழ்நாடு மாநில பெரும் வலைபரப்பில் (TNSWAN) எல்காட் மூலமாக இணைக்கும் பணியினை ரூ. 168.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

**4.7. பயிற்சி :**

நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.7.44 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பாசன ஆதாரங்களின் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் புதிய விஞ்ஞான யுக்திகள் மூலம் பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சி, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம், சென்னை தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் பிற தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாகவும் அளிக்கப்பட்டு வருகிறது.

இவற்றிற்கான ரூ.334 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பயிற்சி நிகழ்ச்சிகள் 13.10.08 முதல் தொடங்கபட்டு, 135 தொழில்நுட்ப பயிற்சிகள் மூலம் 2606 பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2010–2011–ஆம் ஆண்டில் 63 பயிற்சிகள் நடைபெற்று அதன்மூலம் 1139 நீர்வள ஆதாரத்துறை அலுவல்களுக்கு

பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.89.02 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதுவரையில் மொத்தமாக ரூ.226.02 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**4.8. நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் உள்ள ஆலோசனைக் குழு**

**கட்டுமான தரமேலாண்மை மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வை ஆலோசனைக் குழு**

நீர்வள நிலவளத் திட்டத்தில் உள்ள கட்டுமானப் பணிகளின் தரமேலாண்மையை மேம்படுத்துவதற்கான அறிவுரை வழங்குவதே இவ்வாலோசனைக் குழுவின் பணியாகும். இதற்கு ரூ.9.78 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

**4.9. சுற்றுச் சூழல் பணிகளின் நடவடிக்கைகள்**

**(i) சுற்றுச் சூழல் மற்றும் சமூக அமைப்பை தணிக்கை செய்வதற்கான வெளிப்புற கலந்தறிதல் குழு – (கட்டம் I & II)**

இவ்வாலோசனைக் குழுவின் பணியானது நீர்வள நிலவளத் திட்டத்தின் பணிகள், சுற்றுச் சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்புக்கு ஏற்ப நடைபெற சரிபார்க்கப்பட்டு தணிக்கை செய்வதாகும். இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.0.98 கோடியாகும்.

**(ii) சுற்றுச் சூழல் பணிகளின் 6 மாத அறிக்கை**

நீர்வள நிளவள திட்டத்தில் உள்ள அனைத்து உபவடி நிலங்களிலும் சுற்றுப்புற சூழலின் நிலை ஆய்வு செய்யப்படுகிறது.

## 5. மத்திய அரசின் உதவியுடன் செயலாக்கப்படும் திட்டம்

### 5.1. வெள்ள மேலாண்மை திட்டம்

மத்திய அரசின் வழிமுறைகளின்படி 7 வெள்ளத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளை ரூ.692.44 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மத்திய மாநில அரசுகளின் நிதிப் பங்கீட்டு விகிதம் 75:25 ஆகும்.

இதில் கீழ்காணும் 5 பணிகளுக்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த அரசினால் ரூ.635.54 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு தணிக்கப்படும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் மாவட்டத்தில், ஆரணியாற்றின் ஏ.என்.குப்பம் அணைக்கட்டு மற்றும் லட்சுமிபுரம் அணைக்கட்டின் நீர்ப் பாதையில் வெள்ளப் பாதுகாப்பு பணிகள் | 12.41 |
| 2. | தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட பகுதிகளில் ஓடும் கொள்ளிடம் ஆற்றில் வெள்ளத் தடுப்பு பணிகள் | 375.90 |
| 3. | கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு மற்றும் மணிமுக்தா நதியில் வெள்ளப்பாதுகாப்பு பணிகள் | 164.32 |
| 4. | கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி மற்றும் கடலூர் நகரங்களை பெண்ணையாறு, கெடிலம், உப்பனார், பரவனாறு, தெற்கு மலட்டாற்றின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் பணி | 68.41 |

| | | |
|---|---|---|
| 5. | திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாற்றில் நாபாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை வெள்ளப் பாதுகாப்பு பணிகள் | 14.50 |
| | **மொத்தம்** | **635.54** |

## 5.2. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புக் குழுமம் (JNNURM)

சென்னை மாநகரில், வெள்ள பாதிப்பினைத் தணிக்கும் பொருட்டு முக்கிய நீர்வழித்தடங்கள் மற்றும் சிறிய, பெரிய வடிகால்களை சீரமைக்கும் திட்டத்தினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகளில் செயல்படுத்த ரூ.1447.91 கோடிக்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது.

இதில் நீர்வள ஆதாரத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால், கூவம் மற்றும் அடையாறு ஆகிய நீர் வழித்தடங்களைச் சீரமைக்க மொத்தம் 17 பணிகள் 10 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு ரூ.633.03 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளது. இவற்றுள் 7 தொகுப்புகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2010–11–இல் ரூ. 92.88 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 6. மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டங்கள்

### 6.1. சிறுபாசன ஆதாரங்களை தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (NADP - RKVY) சீரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

திருப்பூர் மாவட்டத்தில் நொய்யல் அணைக்கட்டு மற்றும் புனரமைத்தல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில், இறையூர் அணைக்கட்டு ஆகிய 2 பணிகளுக்கு அரசினால் ரூ. 1.50 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, 2010–2011 ஆம் ஆண்டில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக **198.20** எக்டேர் நிலம் கூடுதல் பாசன வசதி பெற்றுள்ளது. இதன் மூலம் **929** மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்தியும் இரண்டு மற்றும் மூன்றாம் போகத்தில் **753** டன் உணவு உற்பத்தியும் சாத்தியமாகிறது.

**முடிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:–**

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் செய்யாற்றின் குறுக்கே உள்ள அணைக்கட்டுகளையும் அதன் ஏரிகளையும் மேம்படுத்தி புனரமைத்தல் | 60.00 | 57.87 |
| 2. | திருப்பூர் மாவட்டம், நொய்யாற்றில் உள்ள மங்கலம் அணைக்கட்டு, ஆண்டிப்பாளையம் அணைக்கட்டு மற்றும் சமலாபுரம் அணைக்கட்டுகளை புனரமைத்தல் | 90.00 | 90.00 |
| | **மொத்தம்** | **150.00** | **147.87** |

## 7. செயற்கை முறையில் தடுப்பணைகள் மூலம் நிலத்தடி நீர்ச் செறிவூட்டுதல்:

தடுப்பணைகள், கசிவுநீர் குட்டைகள், நிலத்தடிநீர் செறிவூட்டும் துளை (Shaft) ஆகியவற்றின் மூலம் செயற்கை முறையில் நிலத்தடி நீர்ச் செறிவூட்ட ரூ.550 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டம் நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் வனத்துறை ஆகிய 5 துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமையாக, நீர்வள ஆதாரத் துறையின்

மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் செயல்படுகிறது. பணிகளின் விவரம் பின்வருமாறு:

**(ரூ.கோடியில்)**

| வ எண் | வருடம் | ஒதுக்கீட்டுத் தொகை | நிதி ஒப்பளிப்பு | மொத்த பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் | முன்னேற்றத்தில் உள்ள பணிகள் | துவக்கப்படவுள்ள பணிகள் | செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2010 –2011 | 122 | 121.89 | 198 | 48 | 43 | 106 | 18.63 |

## 8. மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைத்தல்

### 8.1. காவிரியாற்றினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைக்கும் திட்டம்

காவிரியாற்றினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு, வைகை மற்றும் குண்டாற்றுடன் இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக, காவிரியாற்றின் குறுக்கே தற்போதுள்ள கட்டளை படுகை அணையிலிருந்து 250 மீட்டருக்கு கீழே புதிதாக ஒரு கதவணை அமைக்கும் பணிக்கு ரூ.189 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கட்டளை படுகை அணையிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய 4 பாசன கால்வாய்களின் நீர் நிர்வாகத்தை மேம்படுத்தி முறைப்படுத்த புதிதாக கட்டப்படவுள்ள கதவணை உதவிகரமாக இருக்கும். பருவமழைக் காலங்களில் 1.04 டி.எம்.சி. நீரை தேக்கி வைக்க இயலும்.

இத்திட்டப்பணிகள் 09.02.2009 அன்று துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. இதுவரை ரூ.107.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**8.2. கன்னடியன் கால்வாயிலிருந்து ஒரு புதிய வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து வறட்சிபகுதிகளான சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை பயன்பெற தாமிரபரணியாற்றினை திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டம்**

கன்னடியன் அணைக்கட்டின் வெள்ள உபரி நீரின் நம்பகத்தன்மை உள்ள அளவினை கன்னடியன் வாய்க்காலிலிருந்து வறட்சிக்கு இலக்காகும் சாத்தான்குளம், திசையன்விளை மற்றும் எம்.எல்.தேரி மணற்காடு வரையில் கொண்டு செல்வதற்காகவும், வழியிலே மணிமுத்தாறு வாய்க்காலில் நீர் பற்றாக்குறை உள்ள மூன்றாம் நான்காம் பகுதிகளுக்கு நீர் வழங்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தினால் தாமிரபரணியாற்றின் கிளை ஆறுகளான பச்சையாறு, கொடுமுடியாறு, கருமேனியாறு மற்றும் நம்பியாறும் இணைக்கப்படும்.

இத்திட்டத்தினை 4 கட்டங்களாகப் பிரித்து செயல்படுத்த ரூ.369 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களிலுள்ள நில கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தை செயலாக்குவதன் மூலம் 17002 எக்டேர் புதிய விளை நிலங்கள் பயனடைவதோடு மொத்தம் 23040 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். இதுவரைரூ.117.70 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**9. தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம், 2007**

நீர்நிலைகளை, ஆக்கிரமிப்புகள் மற்றும் தவறாக பயன்படுத்துவதிலிருந்து, பாதுகாப்பது இன்றியமையாததாகும். ஏரிகள்

மற்றும் அவைகளைச் சார்ந்த பகுதிகளை பாதுகாத்து, அதன் கொள்ளளவில் இருக்குமாறு பராமரிக்காவிட்டால் பயிரிடும் பரப்பு குறைந்து போகும் அபாயம் ஏற்படலாம். இதனால் உணவு உற்பத்தி குறைவதுடன், நிலத்தடிநீர்அளவு குறைதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும் ஏற்படக்கூடும். தமிழகத்தில் உள்ள ஏரிகளை பாதுகாத்திட "தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம், 2007", நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சட்டத்தை பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பொதுமக்களுக்கும், அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியில் இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துறையின் பராமரிப்பில் 13699 ஏரிகள் உள்ளன. இதுவரை 3404 ஏரிகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஏரிகளில் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**10. மணல் குவாரி**

02.10.2003 முதல் மணல் குவாரி பணிகளை பொதுப்பணித்துறை செயல்படுத்தி வருகிறது. தற்பொழுது மணல் லாரி லோடு (2 யூனிட்டுகள்) ஒன்றிற்கு ரூ.600/– என விற்கபட்டு வருகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் 02.12.2010 நாளிட்ட ஆணையின்படி மாநில அளவிலான கண்காணிப்பு குழு தமிழ் நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகள், 1959–னை தீவிரமாக செயல்படுத்த அமைக்கப்பட்டுள்ளது. 12.01.2011 முதல் பாலாறு மற்றும் தாமிரபரணி ஆறுகள் தவிர ஏனைய மணல் குவாரிகளில் ஒரு குவாரிக்கு 2 இயந்திரங்களுக்கு மிகாமல், இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மணல் விற்பனை மூலம் **2010–2011–ல் 2503444** லாரி லோடுகள் **(2** யூனிட்டுகள்) விற்கப்பட்டு அரசுக்கு ரூ **150.21** கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 11. கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்

ஆந்திரப்பிரதேச அரசுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் **12** டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் **1996** முதல் **2011** ஆண்டு வரை **50.685** டி.எம்.சி. தண்ணீர் பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு **09.10.2010** முதல் **31.12.2010** வரையிலும் மீண்டும் **01.01.2011** முதல் **27.01.2011** வரையிலும் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, மொத்தம் **4.663** டி.எம்.சி.தண்ணீர் தமிழக எல்லையில் பெறப்பட்டுள்ளது.

## 12. 2010–2011–ல் நிறைவேற்றப்பட்ட கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

### கன்னியாகுமரி மாவட்டம்

1. குரும்பணையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் பணி மதிப்பீடு ரூ. **27.71** இலட்சம்
2. பூத்துறையில் கிருஸ்துராசா குடிசடி அருகே விடுபட்ட இடத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பணி மதிப்பீடு ரூ. **39.45** இலட்சம்
3. இராமன்துறையில் உள்ள கடலரிப்புத் தடுப்புச் சுவரினைச் சீரமைக்கும் பணி மதிப்பீடு ரூ.**51.19** இலட்சம்
4. முள்ளூர் துறையிலுள்ள கடலரிப்புத் தடுப்புச் சுவரினைச் சீரமைக்கும் பணி மதிப்பீடு ரூ.**81.79** இலட்சம்
5. தேங்கா பட்டினத்தில் (ஆரியன்தோப்பு) உள்ள கடலரிப்புத் தடுப்புச் சுவரினைச் சீரமைக்கும் பணி மதிப்பீடு ரூ.**53.91** இலட்சம்

6. இறையுமான்துறையிலுள்ள கடலரிப்புத் தடுப்புச் சுவரினைச் சீரமைக்கும் பணி மதிப்பீடு ரூ.142.69 இலட்சம்

**வட சென்னை**

7. வடசென்னையில் எண்ணூர் விரைவுச் சாலையில் அமைந்துள்ள (எல் எஸ் 16.475 கி.மீ–16.850 கி.மீ) கடலரிப்புத் தடுப்புச் சுவரினைச் சீரமைக்கும் பணி மதிப்பீடு ரூ.70 இலட்சம்

**13. மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீராதார விவர மையம்.**

மாநிலத்தில் நிலத்தடி நீர் உபயோகம் கடந்த 1992 – ஆம் வருடத்தில் 63 சதவிகிதமாக இருந்தது கணிசமாக உயர்ந்து 85 சதவிகிதமாக 2003 – ல் உள்ளது. சனவரி 2003 – ல் மதிப்பீடு செய்யப்பட்ட நிலத்தடி நீர் வளம் 815 டி.எம்.சி ஆகவும் அவற்றில் மாநிலத்தில் மீதமுள்ள நிலத்தடி நீர் வளம் 111 டி.எம்.சி ஆகவும் உள்ளது. மீதமுள்ள நிலத்தடி நீர் வளம் 97 பாதுகாப்பு ஒன்றியங்களிலும் 105 மித அபாயகர நிலை ஒன்றியங்களிலும் மற்றும் 37 அபாயகர ஒன்றியங்களிலும் பரவியுள்ளது. 138 ஒன்றியங்கள் ஏற்கெனவே நிலத்தடி நீர் செறிவிற்கு மேல் எடுக்கப்பட்டு அதி நுகர்வு ஒன்றியங்களாக உள்ளது. நிலத்தடி நீர் வள தற்போதைய மதிப்பீடு தற்பொழுது நடைபெற்று வருகிறது.

நிலத்தடிநீர் வளத்தினை பாதுகாத்தும் மற்றும் அறிவுப்பூர்வமாக மேலாண்மை செய்வதும் தற்போதைய மற்றும் வருங்காலத்தின் முக்கிய தேவையாகும். இதன்மூலம் தமிழ்நாடு மாநிலத்தினை நிலத்தடி நீர் வளத்தை பொறுத்தமட்டில் சுய சார்பு மற்றும் நிலைத்தன்மையும் அடைய முடியும்.

நிலத்தடிநீர் மீளப்பெறக்கூடிய பல பிரிவுகளை அடக்கிய வளமாதலால் தொடர் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆய்வு தேவைப்படுகிறது. மாநில நில மற்றும் மேற்பரப்பு ஆதார விவரக்குறிப்பு

மையம், தமிழ்நாடு மாநிலத்தின் நிலத்தடிநீர் வளத்தினை திட்டமிட்டு, மேம்படுத்தி மற்றும் மேலாண்மை செய்திட கீழ்க்கண்டவைகளை நிறைவேற்றியது.

- விஞ்ஞானப் பூர்வமாக நிலத்தடிநீர் ஆய்வு மற்றும் காலமுறைப்படியான நிலத்தடி நீர் வள மதிப்பீடு.
- நிலத்தடிநீர் மற்றும் மேற்பரப்பு நீர்  தொடர்பான நீரியியல், நீர் –வானியல் மற்றும் நீர்த்தன்மை போன்றவை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.
- நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு மற்றும் பாதுகாத்து நிலத்தடி நீர் மேம்பாட்டின் நிலையை மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிலத்தடி நீரினை அறிவுப்பூர்வமாக மேம்படுத்தவும், உரிய முறையில் பயன்படுத்தவும் தகுந்த திட்டம் வரையப்பட்டது.
- நிலத்தடிநீர் இருப்பினை மேம்படுத்த செயற்கைமுறை நீர்செறிவு மற்றும் மழை நீர் சேகரிப்பு போன்றவைகள் சாத்தியமுள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- மாநிலத்தில் நிலத்தடிநீர் வளத்தினை சிறந்தமுறையில் உபயோகப்படுத்தும் வகையில் பிற அரசுத்துறைகள் மற்றும் நீர் உபயோகிப்பாளர்களுடன் கலந்து செயல்படுத்தப்பட்டது.
- நிலத்தடி பாறை அமைப்புகளை அறிய ஆய்வுத்துளைக் கிணறுகள் துளையிடப்பட்டது.
- பொதுமக்கள் அரசுத்துறைகள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு நீர் வழுங்கும் திட்டங்களுக்கும் ஆலோசனை பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
- நிலத்தடிநீர் சான்றிதழ் திட்டங்கள் நடைமுறைபடுத்த வழங்கப்பட்டது.
- மாநிலத்தின் கடற்கரையோரங்களில் நன்நீர் படிவங்களில் கடல் நீர் ஊடுறுவலைத் தடுக்க சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

- மத்திய மற்றும் மாநில நீர்க் கொள்கைகளை நடைமுறைப் படுத்த ஒத்துழைக்கப்பட்டது.
- **31.12.2003** – ல் முடிவுக்கு வரப்பெற்ற நீரியல் திட்டம் ஒன்றின் மூலம் பெறப்பட்ட பயன்களை பராமரித்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டது.

## 13.1. தமிழ்நாடு நிலத்தடிநீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை சட்டம் 2003).

மாநிலத்தின் நிலத்தடிநீர் வளத்தினை பாதுகாத்தும், அதனை அளவுக்கதிகமான எடுப்பதால் உண்டாகும் அபாயங்களிலிருந்து பாதுகாத்தும், அதன் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய மேலாண்மையினை இந்த முக்கிய வளத்திற்கு ஏற்படுத்தியும் குறிப்பிட்ட அளவே அமையப்பெற்ற நிலத்தடி நீர் வளத்தை உபயோகப்படுத்தும் உரிமையினை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கிடைக்கவும், தமிழ்நாடு நிலத்தடிநீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டம் **2003** கொண்டுவரப்பட்டு நிலத்தடிநீர் நிலைமை அபாயகரமாக உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு அறிவிக்கை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சட்டத்தினை நடைமுறைப்படுத்த நிலத்தடிநீர் ஆணையம் மற்றும் விதிகள் ஏற்படுத்த வேண்டும். இதன் முதல் நடவடிக்கையாக மாநிலம் முழுவதும் நீர் வள ஒருங்கிணைப்புத் திட்டம் (ருசுஊஞ) நிதியிலிருந்து ரூ. **500** இலட்சத்திற்கு கிணறுகள் கணக்கெடுப்பு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

## 13.2. நீரியல் திட்டம் ( கட்டம் –II)

நீரியல் திட்டம் (தொகுப்பு–ஐ) திட்டத்தின்கீழ் பெறப்பெற்ற பயன்களை ஒருங்கினைக்கும் முகமாக நீரியல் திட்டம் ஐஐ நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய பகுதியாக ஒருங்கிணைந்த நீர்வள

மேலாண்மையும் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் வெள்ள முன்னறிவுப்பும், வைப்பாறு ஆற்றுப்படுகையில் வறட்சி மேலாண்மையும் அக்னி ஆறு படுகையில் மேற்பரப்பு மற்றும் நிலத்தடிநீர் கூட்டு உபயோகமும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முடிவெடுத்தலின் ஆதார அமைப்பு (Decision support system) டென்மார்க் நாட்டின் DHI ஆலோசனையாளர்களின் கருத்துக்களின்படி தொடரப்பட்டது.

14. **பகுதி – II திட்டங்கள் 2010–2011**

இத்திட்டத்தில் கீழ்காணும் 19 பணிகளுக்கு ரூ.693.00 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. தற்போது 14 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 4 பணிகள் நடைபெற்று வருகிறது. ஒரு பணி கைவிடப்பட்டது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை ரூபாய் இலட்சத்தில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், மலையாத்தா ஓடையின் குறுக்கே புதிய குட்டைஅமைத்து வெள்ள நீரை ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திற்கு திருப்பி விடுதல். | 72.00 | 45% பணிகள் முடிக்கப் பட்டுள்ளது. |
| 2. | திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ரெட்டியம்பாடி கிராமத்திலுள்ள செம்பாகுளம் அணைக்கட்டை சீரமைத்தல். | 30.00 | பணி முடிவடைந்தது |
| 3. | திண்டுக்கல் மாவட்டத்தில் கோவிலூர் கிராமத்தில் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே பழுதடைந்த முத்தன்குளம் அணைகட்டின் மறு கட்டுமானம். | 35.00 | பணி முடிவடைந்தது |

| | | | |
|---|---|---|---|
| 4. | திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், வேம்பார்பட்டி கிராமத்தில் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே உப்பு குளம் அணைகட்டுதல். | 37.00 | 90% பணிகள் முடிக்கப் பட்டுள்ளது |
| 5. | திருப்பூர் மாவட்டத்தில் மண்ணரை ஏரியில் உடைந்த அணை கட்டுமானத்தை புனரமைத்தல். | 18.00 | பணி முடிவடைந்தது |
| 6. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் பூவந்தி ஏரியின் வெள்ளப்பெருக்கு சேதங்களை நிரந்தரமாக சீரமைத்தல். | 66.00 | பணி முடிவடைந்தது |
| 7. | திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டம், மல்லனம்பட்டி கிராமத்தில் வாஞ்சிநதிக்கு குறுக்கே மலையகவுன்டன்பட்டி அணை கட்டுதல். | 22.00 | பணி கைவிடப் பட்டது |
| 8 | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடனா நீர்த்தேக்கத் திட்டத்திலுள்ள வடக்குறவைப்பட்டு கால்வாயில் மேற்புரம் மடை 1 ல் ஒரு வடிகால் அமைக்கும் பணி | 8.00 | பணி முடிவடைந்தது |
| 9 | திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திர வட்டத்தில் கடனா நீர்த்தேக்கத்தின் பழைய அரசம்பட்டு மதகு எண் 1 க்கு மேல்பகுதியில் வெளிபோக்கி அமைத்தல் | 5.00 | பணி முடிவடைந்தது |
| 10 | விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டத்தில் அர்ச்சுனா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட முதன்மை அணைக்கட்டு மற்றும் நெடுங்குளம் உபரிநீர் வழியின் குறுக்கே கட்டப்பட்ட நீர் சேகரிப்பு அணைக்கட்டு ஆகியவற்றை புதுப்பித்தல் மற்றும் திருத்தங்கல் | 15.00 | பணி முடிவடைந்தது |

| | | | |
|---|---|---|---|
| | பெரிய ஏரிக்கு நீர் வழங்குகின்ற வாயக்கால்கள் ஒன்று மற்றும் இரண்டு ஆகியவற்றின் குறுக்கே கட்டுமானப் பணிகள். | | |
| 11 | தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம், வெங்கம்பட்டி கிராமத்தில் மலட்டாற்று ஓடையின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல். | 30.00 | பணி முடிவடைந்தது |
| 12 | திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டத்தில் கிருஷ்ணாபுரம் கிராமம் அருகே கருப்பாநதி பாசனத் திட்டத்தின் கீழ் கருப்பாநதி நீர்த்தேக்கத்திற்குச் செல்லும் அணுகுச் சாலையை மேம்படுத்தல். | 50.00 | பணி முடிவடைந்தது |
| 13 | திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டத்தில் மணமேடு கிராமத்தில் அகண்ட காவிரியின் இடது கரையில் 97/0 மைல் தூரத்தில் கொண்டம்வாரி வடிகாலுக்கான மதகை சீரமைத்தல். | 90.00 | 75% பணிகள் முடிக்கப் பட்டுள்ளது |
| 14 | திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத்தில் கமலாபுரம் கிராமத்தில் பாண்டவராயர் ஆற்றின் குறுக்கே 73/65 மைல் தூரத்தில் தள மட்டச் சுவர் கட்டுதல். | 40.00 | பணி முடிவடைந்தது |
| 15 | நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் மேட்டூர் கிழக்குக் கரை கால்வாய் 34/5 மைல் தூரத்தில் சிறுபாலம் கட்டுதல் | 5.00 | பணி முடிவடைந்தது |
| 16 | மேட்டூரில் உள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கத்திற்கு அதிக வேக இழைப்படகு வாங்குதல், | 10.00 | பணி முடிவடைந்தது |
| 17 | கடலூர் மாவட்டம், கடலூர் வட்டத்தில் தம்பிப்பேட்டை அணைக்கட்டை சீரமைத்தல். | 25.00 | பணி முடிவடைந்தது |

| | | | |
|---|---|---|---|
| 18 | விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் உள்ள செல்லம்பட்டு அணைக்கட்டை சீரமைத்தல். | 30.00 | பணி முடிவடைந்தது |
| 19 | திருவண்ணாமலை மாவட்டத்தின் செய்யாறு வட்டத்தில் உள்ள மணிக்குப்பம் ஏரியை நவீனப்படுத்தி பங்களிப்பு பாசன மேலாண்மை மேற்கொள்ளும் பணி. | 105.00 | 60% பணிகள் முடிக்கப் பட்டுள்ளது |
| | **மொத்தம்** | **693.00** | |

**கே.வி.இராமலிங்கம்**
**பொதுப்பணித்துறை அமைச்சர்**